வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 309/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 1 |
| நாள் | : | 20.01.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவிகுமார் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | நரசிம்மலு | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது முத்தாபுதுபேட்டை ஆவடியில் வசித்து வருகிறேன். தற்போது அரசு பேருந்தில் ஓட்டுநராக இருந்து ஓய்வுபெற்றுவிட்டேன். 21.06.2018 முன்பு சுமார் 8 மாத காலமாக ஆவடி முதல் மிட்டனமல்லி ரூட்டில் எஸ் 47 மினிபஸ் ஓட்டுநராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 21.06.2018ந் தேதி ஆவடியிலிருந்து 323 AVJ என்ற பக்கவாட்டு எண் கொண்ட மினிபஸ் ஓட்டுநராக உமாபதி என்பவர் நடத்துநராக பணிநியமிக்கப்பட்டு பஸ்யை எடுத்துக் கொண்டு சுமார் மாலை 04.45 மணிக்கு முத்தாபுதுப்பேட்டை நோக்கி பட்டாபிராம் பிடிஎம்எஸ் ல் சென்றுக் கொண்டிருந்தபோது திடீரென்று கூட்டமாக வந்து பஸ்சை மடக்கி என்கை தாக்கினார்கள் அதில் நான் மயங்கி விழுந்துவிட்டேன். கண் விழித்து பார்த்தபோது திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் இருந்தேன். என்னை யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. மேலும் போலீசார் அரசு மருத்துவமனை வந்து என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள். அந்த வாக்குமூலத்தில் என்ன இருப்பது என்று எனக்கு தெரியாது. அந்த வாக்குமூல புகாரில் கையெழுத்து மட்டும் என்னிடம் வாங்கினார்கள் அந்த வாக்குமூல புகார் **அ.த.சா.ஆ1** ஆகும்.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

21.06.2018 நான் ஓட்டி சென்ற பேருந்தில் ஒருவர் பைக்கில் வந்து பஸ் மீது மோதுவது போல் வந்தார் என்றும் நான் சுதாரித்து கொண்டு பிரேக்கை பிடித்து விபத்து நடக்காமல் பார்த்து கொண்டேன் என்றும் அந்த நபர் என்னை அசிங்கமாக திட்டி நான் யார் தெரியுமா தேவிடியா பையா என்றும் என் பெயர் மைக்கேல் என்றும் என்னை அசிங்கமாக திட்டினார் நான் அமைதியாக வண்டியை எடுத்து கொண்டு மாலை 05.10 மணிக்கு முத்தாபுதுப்பேட்டையில் இருந்து ஆவடி நோக்கி சென்ற போது பிடிஎம்எஸ் ஸ்பீடு பிரேக் அருகே மைக்கேல் மற்றும் 3 நபர்கள் என்னை பிடித்து கையால் இடது பக்க முகம், தலை, வலதுபக்க தோள்பட்டை, இடதுபக்க காது ஆகிய இடங்களில் அடித்தார்கள் என்றும் பின்னர் பஸ் கண்ணாடியை அடித்து உதைத்தார்கள் என்றும், அங்கிருந்தவர்கள் அவர்களிடமிருந்து என்னை காப்பாற்றினார்கள் என்றும் எனக்கு உடம்பு வலி அதிகமாக இருந்ததால் ஆவடி பணிமனைக்கு தெரிவித்து விட்டு நணபர் ரமேஷ் பாபு என்பவர் மூலம் திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற போது போலிசார் விசாரணை செய்தார்கள் என்றும் அப்போது அவர்களின் நோக்கம் பஸ் கண்ணாடியை உடைத்தவர்மீதும் நடவடிக்கை எடுக்க கோரி வாக்குமூல புகார் கொடுத்தேன் என்றும் தற்போது எதிரிகளுக்கு பவ்யபட்டு பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.01.20 15:55:09 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 309/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 2 |
| நாள் | : | 20.01.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேந்திரன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | முனுசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது முத்தாபுதுபேட்டை ஆவடியில் வசித்து வருகிறேன். நான் முத்தாபுதுபேட்டையில் இன்வன்டர் இன்ஸ்டலேசன் மற்றும் சர்வீஸ் சென்டர் நடத்தி வருகிறேன். இந்த வழக்கபற்றி எனக்கு எதுவும் தெரியாது, அடிபட்ட நபர் என் உறவினர் என்ற முறையில் பட்டாபிராம் காவல்நிலையம் சென்ற அவரை பார்த்தேன் என்றும் மற்றபடி இந்த வழக்கை பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

21.06.2018 மாலை தொழில் விசயமாக ஆவடி செல்வதற்காக எஸ் 47 மினிபஸ்சில் முத்தாபுதுபேட்டையில் ஏறி மாலை 05.15 மணியளவில் பிடிஎம்எஸ் அருகில் சென்றுகொண்டிருந்தபோது ஸ்பீடு பிரேக் அருகில் சிலர் பஸ்சை நிறுத்தினார்கள் என்றும் அதில் 4 நபர்கள் பஸ்குள் ஏறி தகாத வார்த்தைகளால் திட்டி பஸ் டிரைவர் ரவிகுமாரை முகம், தலை, வலது தோள் மற்றும் இடது காதின் மீது அடித்தார்கள் என்றும் நான் கண்டெக்டரும், சிலரும் அவர்களை

மடக்கி முயன்ற போது அவர்கள் பேருந்தின் கண்ணாடியை அடித்து உடைத்தார்கள் என்றும் அதன்பிறகு அவர்களின் ஒருவர் பெயர் மைக்கேல் என்றும் மற்றவர்கள் பெயர் தெரியவில்லை என்றும், ரவிகுமார் வலியால் துடித்தார் என்றும் அவரை திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு செல்வதற்கு கூறினார் என்றும், நான் என்ன என்று கேட்டபோது மேற்கண்ட நபர்கள் அவரை அசிங்கமாக திட்டி அடித்தார்கள் என்றும் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM — Digitally signed by S TASNEEM Date: 2026.01.20 15:55:16 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 309/2024 |
| வழக்கு சாட்சி | : | PW 3 |
| நாள் | : | 20.01.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பார்த்தசாரதி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | கண்ணையாநாயுடு | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது முத்தாபுதுபேட்டை ஆவடியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீஸ் நிலையத்தில் பேருந்து ஓட்டுநர் எனக்கு தெரியும் என்பதால் அவரை பார்க்க சென்றேன் மற்றபடி எனக்கு வேறு எந்த விபரமும் தெரியாது.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

21.06.2018 விவசாய நிலத்திற்கு பூச்சிகொல்லி வாங்க ஆவடி செல்வதற்காக மாலை 05.15 மணிக்கு எஸ் 47 மினிபஸ்சில் முத்தாபுதுபேட்டையில் ஏறினேன் என்றும், அந்த பேருந்து பிடிஎம்எஸ் அருகில் சென்றபோது ஸ்பீடு பிரேக் அருகே திடீரென சில நபர்கள் பஸ் உள்ளே ஏறினார்கள் என்றும், 4 நபர்கள் பஸ் டிரைவரை அசிங்கமாக திட்டி டிரைவர் ரவிகுமாரை முகம், தலை, வலது தோள் மற்றும் இடது காதின் மீது கையால் மாறி மாறி அடித்தார்கள் என்றும் நானும் அங்கிருந்தவர்களும் தடுக்க முயன்ற போது அவாகள் பேருந்தின் கண்ணாடியை உடைத்தார்கள் என்றும், அதில்

மைக்கேல் என்பவர் தேவிடியா பையா என்கிட்டாவ மோதுர என்று சொல்லி கையால் மாறி மாறி அடித்தார்கள் என்றும் ரவிகுமார் வலி தாங்க முடியாமல் ஆவடி பணிமனைக்கு மாற்று ஓட்டுநரை ஏற்பாடு செய்து விட்டு திருவள்ளூர் அரசு மருத்துவமனை செல்வதாக கூறினார் என்றும் என்னிடம் தெரிவித்தார் என்றும், போலீஸ் விசாரணையில் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.01.20 15:55:22 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.